கும்பகோணம் பணிமனைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தைப் பொறுத்தவரை இரண்டு பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. ஒன்று, கும்பகோணம் நகர்; இன்னொன்று, கும்பகோணம் புறநகர். சொந்தப் பணிமனை அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். பணிமனை கட்ட நிலம் தேவை. பணிமனை அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இரண்டு ஏக்கர் நிலத்தில் 50 பேருந்துகள் மட்டுமே நிறுத்தக்கூடிய பணிமனை கட்ட முடியும். 100 பேருந்துகள் நிறுத்தவேண்டுமானால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஆக, முதலிலே நிலத்தைக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெறப்பட்டு, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேவை ஏற்படும்பட்சத்தில் நிதி நிலையை ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

## ஓமியோபதி பிரிவு

***5419—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரைக்கு அருகில் இருக்கின்ற திருமங்கலத்திலே அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 50 படுக்கைகளுடன் உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறக்கூடிய அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

**திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் தினசரி சுமார் 9,000 நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற இடங்களில் ஓமியோபதி பிரிவு இருந்தாலும், மாவட்டத் தலைநகர் என்ற வகையில் ஓமியோபதி பிரிவு துவக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகையின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு கனிவுடன் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*